
அய்யா ஒளி

ஆவணி 1998 ஆகஸ்ட்



அய்யாவழி மக்கள் இயக்கம்

அய்யா துணை

அய்யா ஒளி

காலாண்டு - பருவ இதழ்
(தனிச் சுற்றுக்கு மட்டும்)

விளக்கு 1
சுடர் 1

ஆவணி
1998 ஆகஸ்ட்

நேமிதம்

ஆதித் திருமால்தான்
அய்யாவாய் வந்தார்.

மாயனும் கண்ணனும்
இராமனும்
மகா விஷ்ணுவும்
அவரே.

இறைவன், கடவுள்
பரம்பொருள் என்பதின்
எளிய சொல்லாட்சி
'அய்யா' என்பது.

பூரண நாரணர்
பொற்பதம் போற்றி

'அய்யா ஒளி' யை
ஏற்றுகின்றோம்



'அன்புள்ள பக்தரை ஆல்போல் தழைக்க வைப்பேன்!'

பொருளடக்கம்





கவுரவ ஆசிரியர் : புலவர் கு. பச்சைமால்
ஆசிரியர் குழு : திரு. த. தினகரன், B.A., B.L.
'இந்து பூமி' எஸ். முருகேசன்

அய்யா ஒளி
அய்யாவழி மக்கள் இயக்கம்
சாமித்தோப்பு - 629 704, குமரி மாவட்டம்.
✆ : (04652) 88421

'வாழுவீர் தாழ்வில்லாமல்'

தலையங்கம்

கனிந்தது காலம்

அய்யாவுக்குத் "தொண்டுபுரிய வேண்டும்" என்று ஆசைப்படும் உள்ளங்கள் இன்று சங்கமித்துவிட்டன. அதற்காக ஒரு மக்கள் இயக்கமும் கட்டமைக்கப்பட்டு விட்டது. இதன் வெளிப்பாடே அய்யா ஒளி,

இது ஒரு 'திடீர் முயற்சி' அல்ல. பல காலம் பல்லாயிரம் பக்தர்கள் - அறிஞர்கள் - தொண்டர்கள் மனங்களில் சுத்தி செய்யப்பட்ட காயகல்பம் போன்ற முயற்சி ஆகும்.

பக்தி மார்க்கத்தில் ஒன்றரை நூற்றாண்டுக்குமேல் ஆழங்கால்பட்டு நிற்கும் நம் மக்களைக் கர்ம - ஞான மார்க்கங்களிலும் செலுத்த வேண்டுவது இன்றைய மானிடக்கடமையாகும். இத்திருத்தொண்டில் அய்யா ஒளியின் பங்கு மகத்தானதாக இருக்கும்.

'அய்யா ஒளி' - யின் வரவறிந்ததும் இதை வரவேற்று - வாழ்த்தி பங்களிப்புச் செய்து நிற்கும் சான்றோர் கூட்டத்தைப் பார்த்தால் பெருமிதமாக இருக்கிறது. மக்கள் எழுச்சி மகத்தானது. அது மறுதலிக்க முடியாத - மாற்றங்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல் பெற்ற யுகசக்தி ஆகும்.

இந்த சக்திக்கு ஒளிகாட்டி - வழிகாட்ட அய்யா ஒளி தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்

"அன்பு மலர் எடுத்து அனுதினமும் பூசைசெய்து"

அய்யாவழிக்கு ஆக்கம் சேர்ப்போம்

- ஆசிரியர்.

✆ : 04651-37411

ஸ்ரீ விவேகானந்த ஆசிரமம்,

வெள்ளிமலை, கல்படி அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 204



வாழ்த்துச்செய்தி

'அய்யா ஒளி' என்னும் காலாண்டு பருவ இதழ் வெளியிட உள்ளதறிந்து மிக்க மகிழ்ச்சி.

'தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' என்னும் சிறந்த கொள்கையை நமக்குப் போதிக்கவே அவதாரம் எடுத்தவர் அய்யா வைகுண்டசுவாமிகள்.

மேலும் ஜாதியின் பெயரால் சிலர் செய்த கொடுமைகளுக்கஞ்சி மதம்மாற இருந்த சமூக மக்களை ஒன்றுதிரட்டி, தாய்மதத்தை விடுவதுதவறு என்பதைச் சுட்டிக்காட்டிப் புதிய வழிபாட்டு முறையை உருவாக்கித் துணிவுடன் புரட்சி செய்தார் அய்யா.

ஒற்றுமையும், உறுதியும், ஏழைகள்பால் இரக்கமும்கொண்ட மக்கள் சமுதாயத்தை உருவாக்க அய்யாவின் உபதேசங்கள் வழிகோலும்.

அத்தகைய உபதேசங்களை அவனியெங்கும் எடுத்தியம்பும் பணியில் **'அய்யா ஒளி'** காலாண்டு இதழ் வெற்றி பெற்றுச் சிறப்பாக வெளிவர அய்யா துணை நிற்கப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க அய்யா புகழ்!
வளர்க 'அய்யா ஒளி'!!

ஸ்ரீகுருமகராஜ் பணியில்,

(சுவாமி சைதன்யானந்த)

'தவமே பெரிது எனவே தவநிலைகள் செய்'

திருவருள் திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல
தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு.

✆ : குன்றக்குடி - 04577 - 64267
காரைக்குடி - 04565 - 23215

வாழ்த்துரை

சாமிதோப்பு பகவான் வைகுண்ட அய்யாவின் கோட்பாடுகள் சமூக நீதி சார்ந்தவை. அவற்றைப் பரப்பும் வகையில் **'அய்யா ஒளி'** என்ற இதழ் தொடங்கவிருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது. இந்த இதழ் பயனுள்ள வகையிலும் தொடர்ந்தும் வெளிவரத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

'சகலோர்க்கும் ஈந்து தான் இரு'

IN SPIRIT & TRUTH
Swami P. Vincent

Date : 25-8-98

ஆ✝ம்

SPIRITUALITY CENTRE
"ஆன்மீகத் தோட்டம்"
Beach Road
Kanyakumari - 629 702

அய்யா ஒளி


அய்யாவழியில் ஓர் அய்யா ஒளி

அருமையான நாமம்! அமைதியான நாதம்!
அதுதானே வேண்டும் அவனிக்கு இன்று!

அதன் ஒளியிலே புதுமொழியிலே
அழகிய பாதை ஒன்று அருமையாய் விளங்கக்காண்போம்.

அய்யாவின் ஒளி, அது நல்லாரின் ஒளி.
அது . . . .
அறியாமை இருள் நீக்கும்
அகங்காரப் பழிபோக்கும்
அரக்கரின் நிலைகுலைக்கும்
அதிகாரக் குரல் நெரிக்கும்
அடிமையை விடுவிக்கும்
அறப்பணி வளரவைக்கும்
அனைத்தையும் கடந்துசெல்ல
அற்புத மொழி உதிர்க்கும்.

அது . . .
பகலிலே பசுமைகாட்டும்
இரவிலே எரிந்துநிற்கும்
நகரிலே நடனமாடும்
குகையிலும் குனிந்துசெல்லும்
மனத்துளே மதியுமாகும்
மானிடத் தோழனாகும்
எனக்கது பிடிச்சிருக்கு
எனையது கவர்ந்திருக்கு
வாழி!!



இவண்
பணி. பொ. வின்சென்ட்

'அல்லா நினைத்தபடி ஆகும்!'

கவியரசு டாக்டர் பழனி இளங்கம்பன்

வாழ்த்துச் செய்தி



நினைவன யாவும்
நிகழ்வன ஆகுக
புனைவன யாவும்
புகழ்க்கவி ஆகுக!

'அய்யா ஒளி'
மக்கள் குரலாக
அய்யாவின் ஆத்ம
ஒளிவெளிக் குரலாக
ஞாலமெல்லாம் செல்லவேண்டும்

காலமும் கனிந்தது
வளர்க! வாழ்க!!

இளங்கம்பன்
8.8.98

'மாதிரி போடாதே!

வாழ்த்துச் செய்தி



அறம் நலிந்து மறம் மலிந்து மக்கள் துன்புறுகின்றபோது ஸ்ரீமன் நாராயணமூர்த்தி யுகந்தோறும் அவதாரம் எடுத்து துயர்துடைக்கும் செய்தியை நாம் அறிவோம். கலியுகத்தில் கலியறுக்க வைகுண்ட மூர்த்தியாக மனித உருவில் தோன்றி அருள்பாலித்துக்கொண்டிருக்கும் அய்யாவின் அருள் ஒளியை உலகெங்கும் பரப்பப் பலநூல்கள் தோன்றிய போதிலும் அய்யாவின் பெருமையையும், கொள்கைக் கோட்பாடுகளையும் அன்றாடம் அன்புக்குடிமக்களின் மனம் நிறைவுகொள்ளும் பொருட்டு அய்யாவின் அருளாசியுடன் காலாண்டுப் பருவ இதழ் வெளிவருவதை நினைந்து நினைந்து உளம் பூரிப்படைகிறது. அறிஞர் பெருமக்கள், சிந்தனையாளர்கள், கவிஞர்கள், ஆன்மீக அருளாளர்கள் முதலியோர்களின் படைப்புகளைக்கொண்டு வெளிவரும் **'அய்யா ஒளி'** என்ற அருங்கலைப் பேழை ஆழகும் பொலிவும் பெற்றுப் பல்லாண்டு, பல்லாண்டு ஒளிர வைகுண்ட மூர்த்தியை வணங்கி வாழ்த்துகிறேன்.

வாழ்க **'அய்யா ஒளி'**! வளர்க பாரதம்!

இவண்
நீ. தங்கராஜ்
சுவாமி மதுரானந்தாவீதி,
வருக்கத்தட்டு,
கல்படி அஞ்சல்

'வேலை செய்தால் வினை இல்லை'

வள்ளியூர் Ln. A.P.S. ரவீந்திரன், MJF
தபால் பெட்டி எண் : 38,
பாஸ்கர் லாட்ஜ்,
மீனாட்சிபுரம், நாகர்கோவில் - 629 001.
போன் : 27706, 24996, 22381, 22311.



23-08-198

வருக யுகவிடுதலை

ஓர் ஆன்மீக விடுதலையின்
சமூகப் புரட்சியின்
கண்ணுக்குத் தெரியும்
அடையாளமாக
அய்யா காட்சியளிக்கிறார்.

அவர் அவதாரத்தின் மூலம்
ஓர் எழுச்சி ஏற்பட்டுள்ளது
அதைச் சுயநலமில்லாமல்
வளர்த்தெடுத்தால்
யுக விடுதலையே தோன்றும்.

அய்யா ஒளி இதனை
இலட்சியமாகக்கொண்டு
வளர - ஒளி வீச
வாழ்த்துகிறேன்.

'நல்லார் மனதில் நாரணா என்றுரைப்பார்!'

வைகுண்டர் இயக்கம்



பேராசிரியர் வே.தி. செல்லம்
இளையான்விளை,
அம்மாண்டிவிளை.

குமரி மாவட்டத்தின் வரலாற்றுப் புதல்வர்.

தமிழக வரலாற்றுப் பேரறிஞர்.

தமிழ்நாடு அளவில் வரலாற்றுக் கருத்தரங்குகள், பட்டறைகள் நடத்திப் புகழ் பெற்றவர்.

பன்னூல் ஆசிரியர்.

அரசு கலைக்கல்லூரிகளில் பணியாற்றிச் சிறப்படைந்தவர். 'தமிழக வரலாறு' நூலில் வைகுண்டர் வரலாற்றை முதன்முதலில் சேர்த்து உலகுக்கு வழங்கியவர்.

'A History of Tamil Nadu' என்ற நூலின்மூலம் வைகுண்டர் ஒளியைத் தமிழகத்துக்கு வெளியிலும் கொண்டு சென்றவர்.

ஆழ்ந்த அய்யா பக்தர்.

ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் ஒரு தனித்தன்மையுண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பழமையும் புதுமையும் மோதின; மரபு வழித் தீமைகளும், புதிய சிந்தனையோட்டங்களால் எழுந்த செயல் வீரமும் மோதின; சமூகத்திலும் சமயத்திலும் புரட்சிப்புயல்கள் மையம்கொண்டன;

சமூக சமய இயக்கங்கள் உலகம் தழுவியவை. அமெரிக்காவில் அடிமைத் தளையறுப்பு, ஐரோப்பாவில் அரசியல் சமூக மாற்றங்களை நாடி 1848-இன் புரட்சிகள், பாரசீகத்தில் பாகாயுல்லா இயக்கம், சீனாவில் தெய்ப்பிங் புரட்சி. சப்பானில் மெய்சிப் புரட்சி, வங்கத்தில் இராசா ராம் மோகன்ராயின் பிரம்மச் சங்கச் சீர்திருத்த இயக்கங்கள், தென்னகத்தில் அய்யா வைகுண்ட சாமிகளின் இயக்கம், அருட்பிரகாச வள்ளலாரின் (இராமலிங்க அடிகள்) சமரச சுத்த சன்மார்க்க இயக்கம், திரு நாராயண குரு இயக்கம் போன்றவை பத்தொன்பதாம் நூற்றாண்டை சமூக சமயச் சீர்திருத்த இயக்கங்களின் நூற்றாண்டாக்கின.

தென்னகத்தில் தோன்றிய வழிகாட்டிகள் மூவர். அவர்களுள் காலத்தால் முந்தியவர் அய்யா வைகுண்டர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அய்யா வைகுண்டரும், நடுபகுதியில் அருட் பிரகாச வள்ளலாரும், பிற்பகுதியில் திரு நாராயண குருவும் (கேரளம்) சமூகத்திலும் சமயத்திலும் புகுந்திருந்த தீமைகளுக்குச் சவால்விட்டு

'தவத்துக்கு உறுதி உண்டு!'

புதுவழிகளை வகுத்தளித்து இயக்கங்களை நடத்திச் சென்றனர்.

மூவரும் :

1. உருவமற்ற ஒரே பரம் பொருளை இறையெனக் கண்டனர்;
2. சிறுதெய்வ வழிபாட்டைப் பொருளற்ற தாக்கினர்;
3. வழிபாட்டில் எரிமணப் பொருட்களைத் தவிர்க்கச் செய்தனர்;
4. சமய வழிபாட்டின்போது அமைதி நிலவ இசைக் கருவிகளைத் தவிர்த்தனர்;
5. ஆரவார விழாக்களைத் தவிர்த்தனர்;
6. பக்தனுக்கும் பரம்பொருளுக்கும் இடையில் இடையாளியைத் (புரோகிதர்) தவிர்த்தனர்;
7. காணிக்கையிடும் பழக்கத்தை மறுத்தனர்;
8. சமூகத் தொண்டே சமயத் தொண்டு என்றனர்;
9. சமயத்தில் சமரசம் கண்டனர்
10. அன்புவழிக்கு அடிப்படையாகக் கொல்லா நோன்பை வாழ்க்கைப் பண்பாக்கினர்.

இவற்றால் :

திசைமாறிப் பொருளற்று மிகப் பெரும்பாலோரைப் புறக்கணித்துப் பயனற்றுச் சென்று கொண்டிருந்த மரபுச் சமயத்தின் அடிப்படை களிலிருந்தும் நடைமுறை களிலிருந்தும் விலகியதும், புதிய சமூக விளக்கங்களைக் கூறியதுமான சமய - சமூக நடைமுறைகளை வகுத்துச் செயல்படுத்திச் சென்றனர். சமய ஒருமைப் பாடும் சமூக ஒருமைப்பாடும் புதுவழியின் மூலக்கருக்களாயின.

இதனால் மரபு வழியினர் மனம் புழுங்கினர்; பொறுமை இழந்தனர்; வன்மையாக எதிர்த்தனர்; அடக்கி ஒடுக்க அரசுடன் இணைந்து களத்தில் குதித்தனர்; அடக்கு முறைக் கணையைத் தொடுத்தனர்; தோல்விகண்டனர்! சமயங்கள் வழி காட்டிகளால் உருவாக்கப் பட்டன; சீடர்களாலும், மறைஞானிகளாலும் சமயத் தொண்டர்களாலும் வளர்க்கப்பட்டன; போலிகளால் கெடுக்கப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன என்ற மறைந்த சமயங்களின் வரலாற்றை அறிந்திலர். எனவே எதிர்ப்பு எழுப்பிய சவாலால் திருத்திக் கொள்ளவோ, புதுவழியைச் செரிக்கவோ அவர்களால் இயலவில்லை.

புதுமையான சமயப் புரட்சியுடன் சமூகப்புரட்சியும் இணைந்திருந்தது. சானாதனம் என்று பேசப்படும் வைதீகம் புருடசூக்தத்தைச் சமூகத்தின் மூலக்கருவாகக் காட்டி நால்வருண சாதிப்பிரிவைச் சமயக் கொள்கையாக விளக்கியது. (சதுர்வர்ணம் மாயா சிருட்டம்)

எனவே தர்மசாத்திரப் பண்பாட்டையும் கீதைப்

'ஆசைதான் உங்களுக்குத் தோசம்!'

பண்பாட்டையும் வளர்த்தவர்கள் சாதித் தீமைகளை உரமிட்டு வளப்படுத்தினர். அதன் விளைவால் சமூக நடை முறையில் உழைக்கும் வர்க்கத்தார் கொடுமைப்படுத்த பட்டு வந்ததைக் கண் எதிரே கண்டு மனம் நொந்து வருந்தி,

"அடித்து கை கெட்டி ஆண்
பெண் வரைக்குமிட்டு
இடித்தடைத்துப் பட்டினிகள்
இரவு பகல் போட்டு
. . . .
அய்யோ சான்றோரை
அந்நீசன் செய்ததெல்லாம்
வையமது கொள்ளாதே",

என்று முழங்கினார் அய்யா வைகுண்டர்.

அரசியல் கொடுங் கோன்மைக்கும், சமூக அநீதி களுக்கும் மரபுச் சமயத்தின் தடுமாறல்களுக்கும் எதிராக குரல் எழுப்பிப் புரட்சிக் கொடிபிடித்த அய்யா தென் திருவிதாங்கூரில் கொடுங்கோன்மை நடத்திய அரசரை 'அனந்தபுரத்து நீசன்' என்றும் அவருக்குத் துணை நின்ற ஆங்கிலக் கம்பெனியாரை 'வெண்ணீசன்' என்றும் கடிந்துரைத்தார். மக்கள் மீதான அவருடைய பரிவு, பற்று, பாசம், அன்பு ஆகியவற்றால் மூர்க்கர் களுக்கு எதிராக அவர் உயர்த்திய புரட்சிக்கொடி அன்புக்கொடியாக நிலை கொண்டது. அவர் காட்டிய அதிசயங்கள் எதிரிகளைப் பணிய வைத்தன. மக்கள் வெள்ளம் திரண்டெழுந்தது. அய்யா வைகுண்டர் இயக்கம் பீடுநடையிட்டது. மக்கள் அனைவரையும் ஒரு குடைக்குள் கொண்டுவரக்கருதி

"ஒக்க ஓரினம்போல்
உவந்திருந்து வாழ்வார் காண்"

என்றார். துவையல் பந்திகளும் அன்புக்குடியிருப்புகளும் மக்களை இணைத்து விரி வடைந்தன. மக்களின் ஒருமைப் பாடு, ஒற்றுமை, நன்னெறி, பண்புகள் ஆகியவை வலுப் பெற்று வளர்ந்தன.

அய்யா வைகுண்டர் வகுத்துக் காட்டிய சமய நடை முறைகள் புதுமையானவை பொருளுடையவை, எளிமையானவை, நடைமுறை சாத்தியமுடையவை, சமய ஒழுக்கத்தை வலுவூட்டக் கூடியவை, அனைவரையும் வரவழைத்து அரவணைக்கக் கூடியவை, முறையாக வழிநடத்தக் கூடியவை. பக்தியில் பதிவதற்குப் பதிகளை நிறுவி வழிகாட்டினார். சாமித் தோப்பிலும், அம்பலப்பதியிலும், முட்டப் பதியிலும் தாமரைக் குளத்திலும் அய்யா வைகுண்டரால் பதிகள் நிறுவப்பட்டன. அய்யா வகுத்த

'மானமாக இருந்தால் மாளும் கலி!'

மதிய **'உச்சிப்படிப்பு'** சமயத்தில் புதுமையான ஒரு கூட்டுத் தியானமாகியது. பகவான் புத்தர் சீடர்களுடன் காலையில் பிச்சை யெடுத்துவிட்டுப் பிற்பகலில் அறிவுரைகளும் கூட்டுத் தியானமும் நடத்தியதைப் போன்ற சிறந்த வழிபாட்டு நடைமுறையும் சமய ஒழுக்க முமாகும் இது.

அடிப்படையான சமயப்பணி சமூகப்பணியே என்பது எல்லா வழிகாட்டிகளின் போதனை. வைகுண்டசாமிகள் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தில் பெரும்பிணியாக பட்டினிப் பணி பரவியிருந்தது. சமூக வேற்றுமைகளும் சாதிக் கொடுமைகளால் வெறுப்புணர்வும் காழ்ப்புணர்வும் ஊடுருவி சமூகத் துன்புறுத்தல்கள் மலிந்திருந்தன. இவற்றுக்கு விடையாகவும் சமூகத் தொண்டுக்குத் துணையாகவும் எழுந்தவையே அய்யாவின் தர்மம், இணைத்தாங்கல்கள், அன்புக்குடியிருப்புக்கள்.

சமயப் பணியோடு இணைந்த சமூகப் பணி விரிவடையும் வண்ணம் தென்திருவிதாங்கூரில் செட்டிகுடியிருப்பிலும் அகத்தீசுவரத்திலும், வண்ணான் விளையிலும், வட்டக்கரையிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் கடம்பன் குளத்திலும், பாம்பன் குளத்திலும், வடலிவிளையிலும், பாஞ்சாலங்குறிச்சியிலும் நிழல் தாங்கல்களை அய்யா வைகுண்டரே நிறுவிக்காட்டி யுள்ளார். மேலும்:

1. பிச்சையெடுத்துப் பட்டினிப் பிணிபோக்க 'அய்யாதர்மம்' செய்தல்,
2. சின்னச் சாலைகள் நிறுவி அனாதைக்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் விதவைகளுக்கும், முதியோருக்கும் காப்பகங்களும், கருணை இல்லங்களும் நிறுவிப்பேணுதல்,
3. பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவை நிறுவிப் பேணுதல்,
4. நலிவுற்றோரின் மகளிர் மணத்துக்கு உதவுதல்.
5. நீர்நிலைகள் நிறுவிப் பேணுதல்

என்றவாறு சமயப் பணியோடு சமூகப் பணிகள் ஊக்குவிக்கப் பட்டன.

சமயப்பணிகளும், சமூகப் பணிகளும் விரிவடைந்தன. அன்புக்குடியிருப்புகளும் நூற்றுக்கணக்கான நிழல் தாங்கல்களும் வளர்ந்து பெருகின. காலம் செல்லச் செல்லக் கருத்துக்கள் மாறுவது இயல்பு. சமய அடிப்படைகள் பிறழுவது எல்லா சமயங்களும் சந்தித்த வரலாற்று உண்மை. அடிப்படை சமயக் கொள் கைகள் நழுவி விடுவதாலும் செயலுக்குச் சிரமமானவற்றைக் கைவிடுவதாலும் சமயத்தின் குறிக்கோள் திசைதிரும்பி இயக்கத்தைப் பலவீனமடையச்

'அண்டினபேரை அகற்ற நினையாதே!'

செய்யும் என்பது சமய வரலாறு கண்ட உண்மை.

பதிகளில் நடைமுறை மாறுபாடுகள் எழுந்தன. நிழல் தாங்கல்களில் நடைமுறைகள் மாற்றம்பெற்றன. செயல் திட்டங்கள் நழுவின. பெயர் கூட மாறியது. நிழல் தாங்கல்கள் 'இணத்தான் கோயில்கள்' என அறியப் படலாயின. தற்காலத்தில் மொழித்திருத்தம் செய்வோர் 'நிழல் தாங்கல்கள்' என்கின்றனர். நடைமுறை மாற்றங்களையும், கொள்கை மாற்றங்களையும் தவிர்க்க நடவடிக்கைகளும் வைகுண்டர் நெறியைப் பரந்த தேயங்களில் பரப்ப பிறசமயங்களைப் போன்று திட்டமிட்ட சமயப்பணிகளும் கருக்கொண்டு வெற்றி காணவில்லை. அய்யா வைகுண்டர் இயக்கம் தோன்றியபின் தொடங்கிய சமரச சுத்த சன்மார்க்க இயக்கம் தமிழகத்தைத் தாண்டி விரி வடைந்தது. திரு நாராயணகுரு இயக்கம் கேரளம் முழுவதும் பரவியது. பாரசீகத்தில் தொடங்கிய பாகாய் இயக்கம் உலகநாடுகள் முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது. கி.பி. 1813 க்குப் பின் சமயப்பணியைத் தீவிரப்படுத்திய ஐரோப்பிய கிறிஸ்த்துவ சமயச்சங்கங்களாகிய திருமறைப் பிரச்சார சபை, இலண்டன் சமயப்பணிச் சங்கம், ஆலயப்பணிச்சங்கம், வெசிலியச் சமயப் பணியாளர் சங்கம், காட்லாந்து ஆலயப்பணியாளர் சங்கம் போன்றவையும் இவருக்கு முன்னரே பணியை விரிவுபடுத்திய யேசுசபையினரும் கிறிஸ்த்துவ சமயத்தை உலகம் தழுவிய சமயமாகப் பரப்பினர்.

அய்யா வைகுண்டர் இயக்கம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை இந்தியாவின் தென் கோடியில் அதன் பிறப்பிட வட்டாரமாகிய தென் மாவட்டங்களுக்கு வெளியில் பரப்பப்படவில்லை என்றாலும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுத்தாளர்களின் எழுது கோல்கள் வழியாக வைகுண்டர் இயக்கம் பற்றிய அறிமுகம் வெளிவட்டாரங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. 1960 இல் திருவாளர் ஆர். இராமசுப்பையரின் 'தினமலர்' நாளேடு மூலம் அய்யா வழியினருக்கு வெளியிலுள்ள மக்கள் மத்திக்கு வைகுண்டர் இயக்கம் பற்றிய விளக்கம் எடுத்துச் செல்லப்பட்டது. இதில் பொன் காசி உதயம், தேரூர் சி. உமைதாணுபிள்ளை ஆகியோர் பங்கும் குறிப்பிடத்தக்க வையாகும். புலவர். கு. பச்சை மாலின் அகிலத்திரட்டு வசன காவியத்தின் பங்கும் சிறந்து விளங்குகின்றது. 1976 இல் இக்கட்டுரையாசிரியரின் 'தமிழகம் : வரலாறும் பண்பாடும்' என்ற நூலில் வைகுண்டர் இயக்கம் பற்றிய

'பகட்டுமொழி பேசாதே!'

விளக்கம் இடம்பெற்று தமிழகத்தில் பரவலாக அறிமுகமாகியுள்ளது. 1980 - க்குப்பின் டாக்டர் சர்வேசுவரனாரின் ஆங்கிலக்கட்டுரைகளும், ஆய்வாளர் பொன்னுவின் ஆங்கிலக் கட்டுரைகளும், கட்டுரையாசிரியரின் தமிழகத்தின் வரலாறு **(A History of Tamilnadu, Madras 1985, PP. 294-295)** என்ற ஆங்கில நூலும் வைகுண்டர் இயக்கத்தின் விளக்கத்தைத் தமிழகத்துக்கு வெளியிலும் எடுத்துரைத்துள்ளன. என்றாலும் இவை பெயரளவிலான அறிமுகங்களே. திட்டமிட்ட சமயத் தொண்டர் குழாங்களின் பணியாலேயே அய்யா வைகுண்டர் இயக்கத்தைப் பரந்த மக்கள் சமுத்திரத்துக்கு எடுத்துச்செல்ல இயலும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் 19-ஆம் 20-ஆம் நூற்றாண்டுகளில் சமயம் சார்ந்த சமூகப்பணிக்கு அதிக வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. சமயப்பணியுடன் சமூகப்பணியை இணைத்தோரும், தனிநபர்களும் கூடக் கல்வி நிறுவனங்களையும், காப்பகங்களையும், கருணை இல்லங்களையும் மருத்துவ மனைகளையும் நிறுவினர். சமயத் தொண்டர்கள் கல்வித்தொண்டு மூலம் சமயத்தொண்டை விரிவாக்கினர், சமயத்தை வளப்படுத்தினர். தியாகத்துக்குத் தயாரானோர் சமயத்தொண்டு மூலம் சமூகத்தொண்டாற்றினர். திரு நாராயண குரு இயக்கத்தாரும் இருபதாம் நூற்றாண்டில் வியக்கத்தக்க சமூகப் பணி நிறுவனங்களை நிறுவிப் புகழடைந்துள்ளனர். ஆனால் இத்தகைய நிறுவனங்கள் வைகுண்டர் இயக்கத்தாருக்கு எத்தனை என்பதற்கு எதிர்காலம்தான் விடைசொல்ல வேண்டும்.

1997 - இல் **அய்யாவழி மக்கள் இயக்கம்** செயல் திட்டங்களை முன்வைத்துக் களத்தில் இறங்கியுள்ளது. தியாகம் இல்லாது சாதனை இல்லை. **"அதிக சாதனை வேண்டுமாயின் அதிகம் தியாகம் செய்"** என்பது இந்தோனேசிய நாட்டு முதுமொழி. அய்யா வைகுண்டர் இயக்கத்தார் ஒட்டுமொத்த முயற்சிக்கும் திட்டமிட்ட தொண்டுக்கும், தியாகத்துக்கும் தயாரானால் அய்யா வைகுண்டர் இயக்கம் தென்னகம் தாண்டி பாரதமும், பாரும் தழுவி, அகிலத்திரட்டின் பொருளை அகிலமெல்லாம் பொருள் மணக்கச் செய்யும். ■

இல்லாதவை

பொய்யில்லை பசாசு இல்லை
பிலிலியன் வினைகள் இல்லை
நொய்யில்லை நோவும் இல்லை
நொம்பலத் துன்பம் இல்லை
தொய்யில்லை இலைகள் இல்லை
சுருட்டுமா ஞாலம் இல்லை
மையில்லை உலகத் தோரே. . .
- வைகுண்டர்

'சிவ கருத்தாய் நில்!'

ஓர் ஆய்வுத்திட்டம் அறிவிப்பு

வைகுண்டசாமி ஒரு முழுமையான ஆய்வு

வைகுண்டர் காவியமான அகிலத்திரட்டு, 1841 ஆம் ஆண்டு ஏட்டுச் சுவடியாக எழுதப்பட்டு 1949 ஆம் ஆண்டு முதல் பதிப்பு வெளியிடப்பட்டது. இதுவரை 12 பதிப்புகள் வந்துள்ளன.

வைகுண்டசாமி வரலாறு முதன் முதலில் 1960 ஆம் ஆண்டு தினமலர் நாளிதழில் தொடராக வெளியானது. அன்றுமுதல் இன்றுவரை பல இதழ்களில் வந்துகொண்டே இருக்கிறது.

கடந்த 40 ஆண்டுகளில் அகிலத்திரட்டுப் பற்றி விளக்க வுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் என வந்துள்ள நூற்கள் மிகப் பல.

பல்கலைக் கழகங்களில் பல மாணவர்கள் எம்.ஃபில். ஆய்வுக்கு இந்நூலைப் பயன் படுத்தியுள்ளனர். பி.எச்.டி. ஆய்வுக்கும் முயன்றுள்ளனர்.

கல்லூரிப் பாடநூலில் அகிலத்திரட்டின் ஒரு பகுதி ஒருமுறை சேர்க்கப்பட்டுள்ளது.

பல அமைப்புகள் - சங்கங்கள் பல காலங்களில் குமரிமுதல் சென்னைவரை தொடங்கப்பட்டு அய்யா பணி ஆற்றியுள்ளன.

தமிழ், மலையாளம் மற்றும் ஆங்கிலத்தில் வைகுண்டர் பற்றிய நூல்கள் வந்துள்ளன. வைகுண்டரைப் போற்றிய நூல்களைப் போலவே தூற்றிய நூல்களும் தோன்றியுள்ளன.

வெளிநாட்டுச் சமயத் தொண்டகளும் - ஆய்வாளர் களும் வைகுண்டர் பற்றி எழுதி யுள்ளனர். 'மிஷன் ரிப்போர்ட்' களிலும் குறிப்புகள் உள்ளன. அய்யாவோடு பிற ஆன்மீக அருளாளர்களை ஒப்பாய்வு செய்யும் முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாடு முழுவதும் உள்ள பதிகள் - தாங்கல் - மன்றங்கள் மூலம் நூல்கள் -

சாதி ஒன்றாக

அறிந்து பல சாதி
அன்பு ஒன்றுக் குள்ளானால்
பிரிந்துமிக வாழாமல்
பெரியோராய் வாழ்ந்திருப்பீர்

- அகிலம்

'வல்ல தவசு மனம் பிரியாமல் செய்'

மலர்கள் - இசைப் பாடல்கள் ஒலிப் பேழைகள் வெளியிடப் பட்டுள்ளன.

சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்களிலும் நாடகம் வில்லிசை போன்றவற்றிலும் அய்யா வரலாறு வந்துள்ளது.

நாத்திக - பொதுவுடைமை இயக்கங்களும் அவைகளின் கோட்பாடுகளை ஏற்றுள்ள ஆய்வாளர்களும் தம் இதழ் களிலும் நூல்களிலும் பயனுள்ள குறிப்புக்களை எழுதியுள்ளனர்.

கவிமணியின் நூல் ஒன்றிலும் நாட்டுப்புறப் பாடல்களிலும் நல்ல குறிப்புகள் பதிவாகியுள்ளன.

இவை தவிர நம் பார்வைக்கு எட்டாதவை எவ்வளவோ இருக்கும். இவை அனைத்தையும் தொகுத்து - பகுத்து - வகைசெய்து **'வைகுண்டசாமி ஒரு முழுமையான ஆய்வு'** - என்ற பொருளில் ஓர் ஆய்வுத் திட்டத்தை அய்யாவழி மக்கள் இயக்கம் தொடங்கியுள்ளது.

மூன்றாண்டுத் திட்டத்தில் இப்பணி நிறைவேற்றப்பட்டு பெரிய ஆய்வுத் தொகுதி வெளியிட முயல்கிறோம்.

மேற்குறிப்பிட்ட தொகை - வகையாக வெளியீடு செய்திருப் பவர்கள் குறிப்புக்களைத் தொகுத்திருப்பவர்கள் அய்யா வழி மக்கள் இயக்கத்தோடு தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

கள்ளர் வாழ்வு

முள்முருக்கம் பூ
மினுக்கு மூன்று
நாளைக்கு!
கள்ளருக்கு வாழ்வு
காணும்
அதுபோல் மினுக்கு!

- அகிலம்

ஆர்வமுடன் இவ்வாய்வை மேற்கொள்ள அறிஞர்கள் முன்வந்தால் அவர்களுக்கு எல்லா வகையான ஆதரவு களையும் வழங்க அய்யாவழி மக்கள் இயக்கம் ஆயத்தமாக இருக்கிறது.

இது - காலகாலத்துக்கும் பயன்படும் அரிய பணி.

அசுர முயற்சி தேவைப்படும் பெரிய பணி.

உண்மையான அய்யா பணி.

அய்யாவின் அருட்பார்வை கிடைத்திருக்கிறது. ஆய்வுப் பார்வையும் இதில் சங்கமிக்க விழைகின்றோம்.

தொடர்பு கொள்ளுங்கள்

- ஆசிரியர்.

'பொறுமை பெரிது பெரிய திருமகனே!'

அகிலத் திரட்டில் அய்யா வைகுண்டர்



வழக்கறிஞர்
த. தினகரன்

அய்யாவின் தவச்சாலைக்குத் திவ்வியபணி செய்து சிலையாக நிற்கும் அமரர் சுவாமிநாதன் நாடாரின் பேரப்பிள்ளை. பரம்பரைக் குணம் மட்டும் மாறாமல் இன்றும் அய்யாவழிக்கு ஆக்கபூர்வமாகத் தொண்டாற்றும் ஆன்மீக வித்தகர்.

21 நூல்களை வெளியிட்டுச் சாதனை புரிந்துள்ள அகிலத்திருக் குடும்பத்தின் (1989) தலைவர். 1991 முதல் வருகின்ற 'பஞ்சபதி இனிமம்' மாத இதழின் ஆசிரியர்.

தர்மபீடர் இல்லத்து ஏடு, கொட்டங்காடு ஏடு, பாஞ்சாலங்குறிச்சி ஏடு முதலியவற்றை ஒப்பிட்டு அகிலத்திரட்டுக்குச் செம்பதிப்பு வெளியிட்ட செம்மல். தற்போது அகிலத்திரட்டுக்கு விரிவான உரை எழுதிவரும் புலமையாளர்.

திவ்ய மங்கலங்களோடு கூடிய திருமாலே கலி மாய இருளகற்ற, இம்மண்ணுலகில், வைகுண்ட சுவாமியாக திருப்பிறப்பெடுத்து வந்தார் என்று அகிலம் கூறுகிறது. இவ்வுண்மையை உணராத சிலர் சம்பூர்ணத்தேவன் என்பவர், சுவாமிதோப்பில் முத்துக்குட்டி என்ற பெயரில்பிறந்து, நோய் தீரத் திருச்செந்தூர் சென்றவர், ஞானம் பெற்று, வைகுண்டசுவாமியாகிவிட்டார் என்று தவறாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

"நாராயணரே நல்ல வைகுண்டமென
சீரான தெட்சணத்தில்
சிறந்ததவம் செய்யலுற்றார்"

- அகிலம்

விண்ணில் சம்பூர்ணத் தேவன்

தேவலோகத்தில் வாழ்ந்த சம்பூர்ணத் தேவனும், எமலோலகத்தில் வாழ்ந்த தபோதனன் ஒருவனின் மனைவியான பரதேவதை என்பவளும் ஒருவரையொருவர் நேசித்தார்கள். தங்கள் ஆசை ஈடேறும் வகையில், இருவரையும் பூவுலகில் கணவன் மனைவியாகப் பிறவி செய்யுமாறும் திருமாலிடம் வரம் கேட்டார்கள்.

அடுத்தவர் மனைவி மீது ஆசைகொள்வது தவறென்று, பகவான் எடுத்துரைத்தும் கேளாததினால் இருவரையும் தவம் செய்யுமாறு உத்தரவிட்டார். தவத்தினையும் அவர்கள் சரியாக செய்து நிறைவேற்றத் தவறிவிட்டார்கள்.

'தர்மத்தால் கலியைக் கரை'

பகவான், பரதேவதையிடம் "பூவுலகில் பெண்ணாய்ப் பிறந்து கர்மத்தின் பயனை அனுபவித்து விட்டு, பின் என்னை வந்தடைவாய்" - என்று கூறி அவளைப் பிறவிசெய்தார்.

"அவளைப்போலவே நீயும் பூமியில் பிறந்து வாழ்ந்துவரும் நாளில் நான் தேச பரசோதனைக்காக, வைகுண்டராய் அவதரித்து அங்கு வருவேன். நான் அங்கு வரும் நாளில் உனக்கு நற்பேறு அருள்வேன்" - என்றுகூறி சம்பூர்ணத் தேவனையும் மண்ணில் பிறக்க வைத்தார்.

மண்ணில் சம்பூர்ணத்தேவன்

மண்ணில் பிறந்த பரதேவதை தன் முந்தைய கணவனுக்கே மனைவியாக வாழ்க்கைப்பட்டு, சிறிது காலம் அவனோடு இல்லறம் நடத்தி, பின் அவனைத் துறந்து, சம்பூர்ணத் தேவனோடு உறவுகொண்டு, இருவரும் கணவன் மனைவிபோல் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறிருக்க சம்பூர்ணத் தேவன் திடீர் என்று நோய்வாய்ப்பட, அவன் தாய்கண்ட கனவின்படி அவனைத் திருச்செந்தூர் கொண்டு வந்தார்கள். திருமால் அங்குவைத்து இருமுனிவர்கள் மூலம் அவனுக்கு மறுபிறவி அளித்தார்.

அன்று திருமாலின் அருள்பெற்ற சம்பூர்ணன் தர்மயுகத்தில் அய்யா வைகுண்டரின் அருளாட்சி மலரும்போது வருவதாக திரு அருள் நூல் கூறுகின்றது.

"அம்புவியை அரசாள வரும்போது சம்பூர்ணத் தேவனைத் தானெழுப்ப அய்யாவும்" - திரு அருள் நூல்

சம்பூர்ணனைப்பற்றிய வரலாறு இதோடு முற்றுப் பெறுகிறது.

வைகுண்டர் திரு அவதாரம்

சம்பூர்ணன் வாழ்க்கை முடிந்த அன்று திருச்செந்தூர் கடலில், அனைத்துலகங்களையும் காத்து இரட்ச்சிக்கும் திருமால், கொல்லம் ஆண்டு 1008 மாசி 20 ஞாயிற்றுக் கிழமை அரூபியாக 'அய்யாவைகுண்டர்' என திருப்பிறப்பெடுத்தார். உலக மக்கள் தன்னை கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காக 25 - ஆம் தேதி வெள்ளிக்கிழமை மானிட உருவம் தாங்கி, பூவண்டன் என்பவருக்குச் சொந்தமான இன்றைய சுவாமிதோப்பில் வந்திருந்து தன் அவதாரத்தை நடத்தினார்.

'பொறுதி மகனே பெரியோர் ஆகுவது'

"மங்கள நாதன் மனு சொரூப மேயெடுத்து நருட்கள் மிகக்காண நால்திசையும் மேவிவந்தார்" - அகிலம்

18 ஆண்டுகள் மாமனிதன் போல வையகத்தில் இருந்து திருவருள்புரிந்தார். "வையம் அறிய மனுப்போலும் இருந்தார்"
- அகிலம்

கொல்லம் ஆண்டு 1026 - ல் தன் அவதாரத்தை நிறைவு செய்துவிட்டு தேவ விமானம் ஏறி வைகுண்டம் எழுந்தருளினார். அங்கு அவருக்குத் திருமுடி சூட்டப்பட்டது.

வைகுண்டர் திருக்கோயில்

அய்யா வைகுண்டர் வைகுண்டம் சென்றபின் அவர் எழுந்தருளியிருந்த இடத்தில், அவரது அருள் ஒளியும் ஒலியும் விளங்குவதை உணர்ந்த சான்றோர்கள் அழகிய மணிக்கோயில் ஒன்றை அமைத்து வழிபட்டு வருகிறார்கள்.

"பொன் மேனிக்கூட்டை பொதிந்து **மணிக்கோயில்** வைத்துத் தென்மேனிச் சான்றோர் திருநாள் நடத்திவந்தார்"
- அகிலம்

பொன்மேனி - அழல் திருமேனி, ஞான ஒளி, ஆன்ம ஒளி

கூட்டை - சந்திரன், சூரியன் அக்கினி என்ற முச்சுடர் கூட்டு

பொன்மேனிக் கூட்டை - முச்சுடர் ஜோதிவடிவை.

ஞானிகள் பகவானை இவ்வடிவில்தான் காண்கிறார்கள்.

"திருக்கண்டேன் **பொன்மேனி** கண்டேன்" - திவ்யப்பிரபந்தம்

"பொன் திகழ் மேனி"
- திருவாசகம்

மணிக்கோயில் - இறைவனை உருவமற்ற நிலையில் நாதசொரூபமாக வழிபடும் கோயில்

"தில்லை மா**மணிக்கோயில்**"
- நம்பியாண்டார் நம்பி

■



திருமொழிகள்

தினமொரு நேரம் எந்தன்
திருமொழி யதனைக் கேட்டால்
பனிவெள்ளம் போலப்
பாவம் பறந்திடும்
- அகிலம்

'நீதி அழியாதே நீ சாபம் கூறாதே'

அய்யாவழி மக்கள் இயக்கம்

'அய்யா ஒளி'

சாமித்தோப்பு - 629 704, குமரி மாவட்டம்

அய்யாவழி என்பது . . .

- **நம் இருட்டைப்போக்கிய புதிய வெளிச்சம்!**
- **இந்து சமயத்தின் நவீன எழுச்சி!**
- **நம் சமூக - ஆன்மீகப் புரட்சியின் அடையாளம்!**

அய்யாவழியை ஒரு மக்கள் இயக்கமாக நாம் முன்பே தொடங்கியிருந்தால் இன்று அது இந்தியாவிலேயே பெரிய மறுமலர்ச்சி நிறுவனமாக வளர்ந்திருக்கும். உலகுக்கே வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்திருக்கும்.

வள்ளலாருக்கும் நாராயணகுருவுக்கும் காலத்தால் முன்தோன்றிய புரட்சி இயக்கமாகிய அய்யாவழி சாதனையால் பின்தங்கிவிட்டதை இன்றும் நாம் காண்கிறோம். அதை முன்னடத்திச் செல்லும் ஒரு 'மக்கள் இயக்கம்' இல்லாமையே இதற்கெல்லாம் காரணம் என்பதைக் காலம் நமக்கு உணர்த்திவிட்டது.

எனவே **புதிய நூற்றாண்டின் வரவை முன்னிட்டு . . . .**

- அய்யா வழிக்கு புதிய ஆக்கம் சேர்க்கவும்;
- நாடு தழுவிய நிலையில் அதை வளர்க்கவும்;
- அய்யா பெயரால் அறிவுப் பணிகள் புரியவும்;
- வைகுண்டர் போதனைகளை உலகமெல்லாம் பரப்பவும்

அய்யாவழி மக்கள் இயக்கம் என்ற அமைப்பு 1997 நவம்பரில் தொடங்கப்பட்டுள்ளது.

இயக்கத்தின் கருத்துப் பரவலுக்காகவும் அறிஞர்களின் கருத்துப் பங்களிப்புகளை உலகுக்குப் படைக்கவும் **'அய்யா ஒளி'** என்ற காலாண்டு இதழையும் வெளியிடுகிறோம்.

தாங்கள் இயக்கத்தில் :

- செயல் உறுப்பினராய் விளங்கவும்
- வளர்ச்சிக்கு நல்ல கருத்துக்கள் வழங்கவும்
- சாதனைகளில் பங்காளியாகத் திகழவும்
- 'அய்யாவழிக் காவலர்' என்ற பெருமை பெறவும்
- 'அய்யா ஒளி'க்கு நன்கொடையாளர் ஆகவும்.

அன்புடன் வேண்டுகிறோம்

அய்யாவழித் தொண்டில்
தர்மசீடர். நா. பால்சீசர்
நிறுவனர்

'நீண்ட புகழ் தர்மம் நிறுத்தி அரசு ஆள்க!'

கலியுகத் தருமம்



பெரியவர்
மு. வைகுண்ட வேல்
எட்டுக்கூட்டுத் தேரிவிளை

வைகுண்ட சாமியின்
தீர்க்க தரிசனங்களுக்குப்
பொருள் காண்பதில்
ஈடுபட்டு வரும் அறிஞர்.

ஓய்வுபெற்ற
அரசுப் பணியாளர்.

வேலின் சுடர்மையும்
வேகமும் கொண்டு
வைகுண்டர்
கொள்கைகளைப்
பரப்பும் சான்றோர்.

தருமம் என்ற சொல்லுக்குச் சான்றோர்களால் சொல்லப்பட்ட பல பொருள்களுள் இயல்பு, தொழில் என்பவை குறிப்பிடத் தக்கவையாகும்.

சாக்கடையில் சிறிய புழுக்கள் ஏராளம் இருக்கும். அதில் ஒரு பெரிய புழு இருக்கிறது. அதனைக் 'கொம்பன்புழு' என்றும் சொல்வார்கள். இந்தப் புழுவைக்கண்டால் சிறிய புழுக்கள் எல்லாம் ஓடி மறைந்து கொள்ளும். இல்லாவிடில் இந்தப் பெரிய புழுவுக்குச் சிறய புழுக்கள் இரையாகிவிடும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கலியுகத்தில் இந்த மோசமான காலகட்டத்தில், உயர்கல்வி பயின்று பட்டங்கள் பெற்றுப் பெரிய பதவிகளில் இருப்போர், பரம்பரை பணக்காரர், அரசியலில் உயர் பதவிவகிப்போர் எல்லோருமே எதிர்பாராத இன்னல்களுக்கு ஆளாவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதற்குக் காரணம், மேற்குறிப்பிட்ட அனைத்துப் பிரிவினரும், 'என்னை எந்தக் கொம்பனாலும் எதுவும் செய்யமுடியாது' என்ற ஆணவத்துடன் செயல்படுவதாகும். பகவான், இதனைக் கீழ்வரும் அருள்நூல் பாடல் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.

"கொம்பன் புழு என்றறியாமல்
குதி போடுகிறார் கலியில்"

'கொம்பன் புழு' - என்பது கலியின் கொடூரத்தன்மையாகும். இதுவும் கலியுகத் தன்மைகளில் ஒன்றாகும்.

கலியுகக் கொடுமைகளிலிருந்து மனித இனம் காப்பாற்றப்பட வேண்டுமானால் நாம் தரும சிந்தனையோடு இறைவழிபாடும் செய்திட வேண்டும் என்பது சான்றோர் கருத்து. ■

'மானமாய் வருந்தி மகிழ்ந்து இரு'

அய்யாவின் அடிச்சுவட்டில் . . .



செ.கு. வேள்
வைராகுடியிருப்பு

விவேகமிக்க இளம் எழுத்தாளர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டுத் துறைப் பொறியாளர்.

மகளிர் விடுதலை இயக்க அமைப்பாளர்களில் ஒருவர்.

அய்யாவின் கோட்பாட்டு வீரர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய தென்திருவிதாங்கூர்ப் பகுதியில் சாதீயக் கொடுமைகளால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி வாழ்வின் விளிம்பில் நின்ற வெகுமக்கள் சமுதாயத்தை வாழ்விக்க, 'வாராதது போல்வந்த மாமணி' நம் அய்யா.

18 - ஆம் நூற்றாண்டுக் காலத்தில் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் தாழ்த்தப்பட்ட மக்களை ஈடேற்றப் பல்லாற்றானும் உதவிகள் புரிந்தனர். அவர்களின் தலையாய நோக்கம் தம் மதத்தைப் பரப்புதலே எனினும் நம் மக்களுக்கு அவர்கள் செய்த நன்மைகளும் அவர்தம் ஈகச் செயல்களும் எழுத்தில் வடிக்க முடியாதவை. இருப்பினும் நம் மக்கள், குறிப்பாக மதம் மாறாதவர்கள் கொடுமைகளை எதிர்கொண்டே வாழ்ந்தனர்.

இச்சூழலில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தட்டி எழுப்பி, ஒன்றுபடுத்தி, விடுதலை உணர்வும், மானமும், அறிவும் பெறச்செய்து வாழ்விக்க வந்த வள்ளலே அய்யா, "தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தருமம்" என உணர்த்தி அதையே தம் வாழ்நாள் பணியாகக் கொண்டு உழைத்தார்.

"மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்",

"சாதியும் சமயமும் மதமும் பொய் . . ."

என்றெல்லாம் போதித்த இராமலிங்க

'நன்றி மறவாதே'

வள்ளலாரும், நாராயண குருவும் அய்யாவுக்குப் பின்வந்த சமுதாயச் சீர்த்திருத்தவாதிகள்.

பார்ப்பன வல்லாண் மையைக் கடுமையாகச் சாடிய அய்யா, 'பிராமணர்களைப் பயம் காட்ட நாம் வருவோம்' எனத் தம் அன்பர்களுக்குத் திடம் உரைத்தார். பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை களைக்கண்டு மனம் வெதும்பிய அய்யா, 'பெண்பாவம் பாராதே' என மக்களுக்கு அறிவுறுத்திப் பெண்ணுரிமை காக்க முனைந்து செயல்பட்டார். பிற்காலத்தில் தாழ்த்தப்பட்ட பெண்களின் தோள்சீலைப் போராட்டம் ஏற்படவும், பெண்கள் இடுப்பில் குடம் எடுத்துச் செல்லும் உரிமை நிலைநாட்டப்படவும் அய்யாவின் செயல்பாடுகளே வழிகோலின.

நமது மக்கள் ஒற்றுமையாய் வாழ்ந்திடவும் தேவையற்ற செலவுகள் செய்வதைத் தவிர்த்து நல்வாழ்வு வாழவும்

"இன்று முதல் எல்லோரும் . . .
ஒன்றுபோல் ஒரு புத்தியாய்
இருங்கோ
காணிக்கை இடாதுங்கோ
காவடி தூக்காதுங்கோ
வீணுக்குத் தேடுமுதல்
விறுதாவில் போடாதுங்கோ
அவனவன்தேடுமுதல் அவனவன்
வைத்தூண்டிடுங்கோ
எவனெவனுக்கும் பதறி
யினி மலைய வேண்டாம்"

என்றும்

"பதறாமல் நீங்கள் பண்பாய்
ஒருப்போலே
சிதறாமல் நீங்கள் செய்யவறு
கூலமாய்
இருந்து மிக வாழும்"

என்றும் அறிவுறுத்துகிறார் அய்யா.

குமுகாயச் சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடியான நம் அய்யா ஒரு புரட்சி மாவீரர். புரட்சி எனும் சொல் மிகவும் கீழ்மைப் படுத்தப்படும் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். நம் மக்களை மூளைச் சலவை செய்து அறிவை மழுங்கடிக்கவென்றே கங்கணம் கட்டிக்கொண்டு ஒரு கூட்டம் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம் மக்களும் பாம்பின் வாய்க்குள் அடைக்கலம் தேடும் தவளைகளாய், அறிவு நினைவு அற்றுத் தம் தலையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளும் நிலையில் உள்ளனர்.

மானமும் அறிவுமே மனிதர்க்கழகு. "மானமாக இருந்தால் மாளுங்கலி தன்னாலே" என்றார் அய்யா. ஒளிவிளக்காய் வழிகாட்டும் அய்யாவின் அடிச்சுவட்டில் அவர்தம் சிறந்த கருத்துக்களைப் பின்பற்றி வாழ்ந்தால் நம் மக்கள் ஈடேறுவது திண்ணம். இல்லையேல் அழிவு வெகு தொலைவில் இல்லை. எனவே விழிமின்! எழுமின்! உணர்மின்! உழைமின்! ■

'பொய்யரோடு அன்பு பொருந்தி இருக்காதே'